கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

முன்னிலை**:** திரு**.**ஜி**.**சரண்**,B.L., P.G.Dip.in Env.Law.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல் (முழு கூடுதல் பொறுப்பு)

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் நாள் செவ்வாய்கிழமை.

<u>இ.ம. எண்.**4/2025**</u>

உள்

அ.வ. எண்.295/2022

டி.கண்ணன் ... மனுதாரர் / வாதி

/எதிர்/

1. பி.சரோஜினி
2. பி.மைதிலி ராஜலட்சுமி ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு 22.04.2025**-**ஆம் தேதி இந்நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர்கள் திருவாளர்கள் எஸ்.நாகராஜ் மற்றும் டி.சிவசந்திரன் ஆகியோர்களும், 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திருவாளர் ஆர்.சரவணன் அவர்களும் ஆஜராகி, இரு தரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலினையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

<u>உத்தரவு</u>

இம்மனு மனுதாரர்/வாதி உ.ந.மு.ச. கட்டளை 6 விதி 17-ன்படி தாக்கல் செய்யப்பட்டு மனுவில் கண்டவாறு பிராதை திருத்தம் செய்ய அனுமதித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சாராம்சம் **:**

மனுதாரர்/ வாதி இந்த மனுவில் மனுதாரரும் அசல் வழக்கில் வாதியும் ஆவார். பிரதிவாதிகள் கடந்த 01.10.2020ம் தேதி ரூ.9லட்சம் கடன் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக சாட்சிகள் முன்பு தாவா புரோநோட்டு

எழுதி அதில் பிரதிவாதிகள் இருவரும் கையெழுத்து மட்டும் செய்து கொடுத்துள்ளார்கள். ஆனால் தாவா பிராதில் பாரா 4ல், புரோநோட்டில் பிரதிவாதிகள் கையெழுத்து மற்றும் கைரேகை செய்து கொடுத்துள்ளதாக தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது. புரோநோட்டில் பிரதிவாதிகள் கையெழுத்து மட்டும் செய்துள்ளார்கள் என இருந்திருக்கவேண்டும். ஆனால் பிராதினை தட்டச்சு செய்யும்போது புரோநோட்டில் கைரேகையும் செய்துள்ளாக தவறுதலாக பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது வேண்டுமென்றே ஏற்பட்ட தவறு அல்ல. இம்மனு அனுமதித்து உத்ததரவிடப்படவேண்டும் இல்லாவிடில் இந்த மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும். மனுப்படி உத்தரவாகவேண்டும்.

3. எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிர் உரையின் சாராம்சம்:

மனு சட்டப்படியும் சங்கதிகளின்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர்களால் உண்மை என ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர மற்றவை மறுக்கப்படுகின்றது. இந்த எதிர்மனுதாரர்கள் மனுதாரர்/வாதியிடம் எத்தகைய பணமும் பெறவில்லை. தாவா பிராமிசரி நோட்டு இந்த வாதியால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தாவா பிராமிசரி நோட்டின்பேரில் எவ்வித மறுபயனும் ஏற்படவில்லை. இந்த எதிர்மனுதாரர்கள் தாவா புரோநோட்டின் பேரில் கடன் பெற்றார்கள் என்பதற்கு எவ்வித காரணங்களோ, விபரங்களோ மனுதாரர் தரப்பில் இல்லை. மனுதாரர் கோரும் திருத்தமானது இந்த வழக்கின் அடிப்படைத் தன்மையை மாற்றக்கூடியதாகவும் புதிய விபரங்களை கொண்டு வருவதாகவும் உள்ளது. வழக்கின் இயற்கை அமைப்பை மாற்றக்கூடிய திருத்தங்களுக்காக தாக்கல் செய்யப்படும் மனு அனுமதிக்கத்தக்கதல்ல என மாண்புமிகு உச்சநீதிமன்றம் இதுகுறித்து தீர்ப்புரை வழங்கியுள்ளது. இந்நிலையில் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

4. இருதரப்பும் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சியமோ, சான்றாவணமோ எதுவுமில்லை. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

5. இம்மனு அனுமதிக்கத்தக்கதா, அல்லவா என்பது தற்போது பரிசீலிக்க வேண்டிய பிரச்சினையாகும்.

6. <u>தீர்வு :</u>

இம்மனு உ.ந.மு.ச. கட்டளை 6 விதி 17-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் பிரதிவாதிகள் கடந்த 01.10.2020 ம் தேதி ரூ.9 லட்சம் கடன் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக சாட்சிகள் முன்பு தாவா புரோநோட்டு எழுதி அதில் பிரதிவாதிகள் இருவரும் கையெழுத்து மட்டும் செய்து கொடுத்துள்ளார்கள் என்றும் ஆனால் தாவா பிராதில் பாரா 4 ல், புரோநோட்டில் பிரதிவாதிகள் கையெழுத்து மற்றும் கைரேகை செய்து கொடுத்துள்ளதாக தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது என்றும் புரோநோட்டில் பிரதிவாதிகள் கையெழுத்து மட்டும் செய்துள்ளார்கள் என இருந்திருக்கவேண்டுமென்றும், ஆனால் பிராதினை தட்டச்சு செய்யும்போது புரோநோட்டில் கைரேகையும் செய்துள்ளாக தவறுதலாக பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் இது வேண்டுமென்றே ஏற்பட்ட தவறு அல்ல என்றும் எனவே இம்மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டுமென்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனு சட்டத்திற்கு புறம்பானதென்றும் மனுவில் சொல்லப்பட்டுள்ள திருத்தங்களானது அசல் வழக்கின் அடிப்படை தன்மையை மாற்றுவதாக அமைந்துள்ளதென்றும், இயற்கை அமைப்பினை மாற்றக்கூடிய எவ்வித திருத்தங்களுக்கான மனுவும் அனுமதிக்கப்படக்கூடாதென்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் தீர்ப்புரை பிறப்பித்துள்ளதென்றும் எனவே இந்த மனுவினை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் எடுத்துரைப்பதைக் காணமுடிகின்றது.

8. மனுதாரர் / வாதி தரப்பில் இந்த வழக்கில் பிரதிவாதிகள் வாதியிடம் கடன் ரூ.9,00,000/-ம் பெற்றுக்கொண்டு கடனுக்கு ஆதரவாக வா.சா.ஆ.1 புரோநோட்டினை எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றும் அவ்வாறு எழுதிக்-கொடுக்கப்பட்டுள்ள புரோநோட்டில் அவர்கள் இருவரும் கையெழுத்து மட்டுமே செய்துள்ளதாகவும் ஆனால் பிராதினை தயார் செய்யும்போது

தவறுதலாக பிரதிவாதிகள் கையெழுத்து மற்றும் கைரேகையும் வைத்துள்ளதாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளதென்றும் எனவே பிராது பாரா 4 வரிகள் 10 மற்றும் 11 ல் கையெழுத்து மற்றும் கைரேகை செய்து கொடுத்துள்ளார்கள் என பிராதில் குறிப்பிட்டு இருப்பதில் "கைரேகை " என்பதை மட்டும் அடித்துவிட்டு கையெழுத்து செய்து கொடுத்துள்ளார்கள் என மேற்படி பக்கத்தில் பிராதை திருத்தம் செய்யவேண்டுமென்று மனுவில் கோருகின்றார்கள். எதிர்மனுதாரர்கள் தரப்பில் இதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளதை காணமுடிகிறது. இந்நிலையில், வா.சா.ஆ.1 ஆவணத்தை இந்நீதிமன்றம் பார்வையிட்டதில், அந்த ஆவணத்தில் கையெழுத்து மட்டும் செய்திருப்பதைக் காணமுடிகிறது. வா.சா.அ.1 புரோநோட்டில் கைரேகை இல்லை. அதனைத்தான் பிராதில் திருத்தம் மேற்கொள்ளவேண்டுமென்று வாதி கோருகிறார். இந்த திருத்தம் மேற்கொள்வதினால் பிரதிவாதிகள் தரப்பில் கூறுவதுபோல் வழக்கின் இயற்கை அமைப்போ அல்லது அடிப்படை தன்மையோ மாறுவதாக அமையாது என இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும் இந்த திருத்தம் மேற்கொள்வதில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித குந்தகமும் ஏற்படப்போவதில்லை. மேற்படி திருத்தமானது தட்டச்சு பிழையாகத்தான் காணப்படுகிறது. இந்நிலையில் இம்மனுவை அனுமதிப்பதே இயற்கை நியதிக்கு உகந்தது என்பதாக இந்நீதின்றம் கருதுகிறது.

முடிவாக**,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லி, அவரால் கணிணி மூலம் தட்டச்சு செய்து, என்னால் சரிபார்த்து பிழைத்திருத்தி, இன்று 2025-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.04.29 15:18:56 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,

(முழு கூடுதல் பொறுப்பு)

திண்டுக்கல்.

மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் -

-இல்லை-

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.04.29 15:19:30 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,

(முழு கூடுதல் பொறுப்பு)

திண்டுக்கல்.